ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 1910/2 - 2015 අප්‍රේල් මස 16 වැනි බ්‍රහස්පතින්දා - 2015.04.16
*1910/2 ஆம் இலக்கம் – 2015 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 16 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர் பெறுமதி வரிச் சட்டம்**

*2014 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, சேர் பெறுமதி வரி (திருத்தச்) சட்டத்தினால் கடைசியாக திருத்தப்பட்டவாறான 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க சேர் பெறுமதி வரிச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (2) ஆம் உப பிரிவின் (உ) பந்தியின் கீழ் எனக்களிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம் கல்யாணி தஹநாயக்க ஆகிய நான், இங்கு அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்டவாறான இலகுபடுத்தப்பட்ட சேர் பெறுமதி வரிச் சட்டம் தொடர்பில் **மேற்கூறப்பட்ட சட்டத்திற்கான திருத்தங்களினைத் தொடர்ந்து அறிமுகப்படுத்தப்பட்ட திருத்தங்களுடன் மாற்றியமைக்கப்பட்டவாறு 2012.07.30 ஆந் திகதிய** SEC **2012/03** ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் கீழ் ஏற்கனவே வெளியிடப்பட்ட குறித்துரைக்கப்பட்ட வழிகாட்டுதல்கள் அப்பிரிவின் நோக்கத்திற்காக பயன்வலுப்பெறும் என இத்தால் அறிவிக்கின்றேன்.*

*கல்யாணி தஹநாயக்க,*
*உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம்.*

*கொழும்பு 2,*
*2015, ஏப்பிறல் 07 ஆந் திகதி.*

**அட்டவணை**

**இலகுபடுத்தப்பட்ட பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (இபெசேவ) சட்டத்தின் தொழிற்பாடு**

*1.* **இ. பெ. சே. வரித் திட்டத்தின்கீழ் பதிவு செய்யப்படுவதற்குத் தகைமை பெற்றவர்கள்**

*(அ)* *பின்வரும் பெறுமதி சேர் வரி பதிவு செய்யப்பட்ட ஆட்கள் மற்றும் அத்தகைய பதிவு செய்யப்பட்ட ஆட்களுக்கான ஏதேனும் பொருட்கள் அல்லது சேவைகளின் **வழங்குநர்கள்** இந்த இபெசேவ திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படுவதற்கு உரித்துடையவர்களாவர் :-*

(i) *மொத்த வழங்கல்களில் 50% இனை விஞ்சுகின்ற கருத்திட்டம் தொடர்பான வழங்கல்கள், அத்தகைய வழங்கல்கள் இதுவரையில் கருத்திட்ட அமுலாக்க காலப்பகுதியில் பெசேவ சட்டத்தின் 22 ஆம் பிரிவின் உட்பிரிவு (6) இன் ஏற்பாடுகளின் கீழ் உள்ளீட்டு வரிக் கோரிக்கைக்கு உரித்துடையவரும், 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க பெசேவ சட்டத்தின் 14 ஆம் பிரிவின் முதலாவது அட்டவணையின் பகுதி* II *இன் பந்தி*

(ஊ) இன் உப பந்தி (ஒ) இல் குறிப்பீடு செய்யப்பட்டவாறு, 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க உபாய அபிவிருத்தி கருத்திட்டங்கள் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் உட்பிரிவு (4) இன் நியதிகளின்படி, தயாரிக்கப்பட்ட ஏதேனும் உபாய அபிவிருத்தி கருத்திட்டத்திற்கு (இதனகத்துப் பின்னர் "உஅக" என அழைக்கப்படும்) பொருட்கள் அல்லது சேவைகளை வழங்குகின்ற எவரேனும் பதிவு செய்யப்பட்ட ஆள் ;

(ii) கருத்திட்டத்துடன் தொடர்புடைய கொள்வனவுகளான அத்தகைய கொள்வனவுகள், இதுவரையிலான கருத்திட்ட அமுலாக்கல் காலப்பகுதியில் பெ. சே. வரிச் சட்டத்தின் கீழ் உள்ளீட்டு வரிக் கோரிக்கைக்குரித்துடையவரும் உபாய அபிவிருத்திக் கருத்திட்டம் உள்ளடங்கலான பெசேவ சட்டத்தின் 22 ஆம் பிரிவின் 7 ஆம் உட்பிரிவின் கீழ் பதிவு செய்யப்பட்டவருமான எவரேனும் ஆள் ;

(iii) பெசேவ சட்டத்தின் முதலாவது அட்டவணையின் பகுதி II இன் பந்தி (ஊ) இன் உப பந்தி (ii) இற்கு குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் விதித்துரைக்கப்பட்ட கருத்திட்டத்தில் ஈடுபடுகின்ற எவரேனும் பதிவு செய்யப்பட்ட ஆள் ;

(iv) பெசேவ சட்டத்தின் 7 ஆம் பிரிவில் விதித்துரைக்கப்பட்ட பூச்சிய வரி வீதமளிக்கப்பட்ட சேவைகளின் மொத்த வழங்கல்களில் ஐம்பது சதவீதத்தினை விஞ்சுகின்ற பூச்சிய வரி வீதமளிக்கப்பட்ட வழங்கல்களைக் கொண்டிருக்கின்ற எவரேனும் ஏற்றுமதியாளர் அல்லது வழங்குநர் ;

(v) வழங்கல்களின் பெறுமதி மற்றும் பூச்சிய விகித வழங்கல்கள் என்பன அவரது மொத்த வழங்கல்களில் 50% இற்கு அதிகமாக இருக்கும் சந்தர்ப்பத்தில் ஏற்றுமதிக்கான பொருட்களின் தயாரிப்புக்காக பயன்படுத்தவுள்ள ஏற்றுமதியாளர்களுக்கு, இலங்கையில் அவர்களினால் தயாரிக்கப்பட்ட ஏதேனும் பெசேவ விதிக்கத்தக்க பொருட்களை வழங்குகின்ற (பெசே வரிக்கு ஏற்புடைய) எவரேனும் தயாரிப்பாளர் ;

(vi) மொத்த வழங்களில் ஐம்பது சத வீதத்தினை விஞ்சும் வகையில் அத்தகைய சேவைகளை வழங்குமிடத்து, ஏற்றுமதிக்காகத் தயாரிக்கப்பட்ட ஏதேனும் பொருட்களின் தரம், பண்பு அல்லது பெறுமதியின் மேம்பாட்டின் விளைவாக அமையக் கூடிய ஏற்றுமதியாளர்களுக்கு பெறுமதி சேர்க்கப்பட்ட சேவைகளை வழங்குநர்கள் ;

(vii) அத்தகைய பொருட்கள் சேவைகளை வழங்குகின்ற அத்தகைய பதிவு செய்யப்பட்ட ஆளின் மொத்த வழங்களில் ஐம்பது சதவீதத்தினை விஞ்சுகின்ற அத்தகைய வழங்கல்களின் பெறுமதியானது, கிடைக்கப் பெற்ற தகவல்களுக்கிணங்க, ஆணையாளர் நாயகம் திருப்திப்பட்டு அளிக்கப் பெற்றதும் மேலே (i), (ii), (iii), (iv), (v) அல்லது (vi) உப பந்திகளில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் பதிவு செய்யப்பட்ட ஆட்களுக்கான பொருட்கள் அல்லது சேவைகளை வழங்கும் எவரேனும் பதிவு செய்யப்பட்ட ஆள்.

(ஆ) பெறுமதிசேர் வரி அறவிட முடியாத அத்தகைய உபாய அபிவிருத்தி கருத்திட்ட விடயத்தினைக் கவனத்தில் கொள்ளாது இபெசேவ திட்டத்தின் கீழ் பதிவு செய்யுமாறு கேட்கப்படுகின்ற மேலே பந்தி (ii) இல் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் உபாய அபிவிருத்தி கருத்திட்டம்.

*2.* **இலகுபடுத்தப்பட்ட பெ. சே. வரியின் கீழான பதிவு நடைமுறை.**- இ. பெ. சே. வரி பதிவுக்காக சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள் பற்றிய தகவல்கள் மற்றும் SVAT 01 (பதிவுப் படிவம்) என்பனவற்றினை உள்நாட்டு இறைவரி திணைக்களக் கட்டிடத்திலுள்ள இலகுபடுத்தப்பட்ட பெ. சே. வரிக் கிளையில் பெற்றுக் கொள்ள முடியும். அத்துடன் விண்ணப்பங்களை www.ird.gov.lk என்ற திணைக்களத்தின் இணையத்தள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ள முடியும்.

இலகுபடுத்தப்பட்ட பெ. சே. வரி திட்டத்தின் கீழ் பதிவு செய்வதற்கு, குறித்த விண்ணப்பதாரி அங்கீகரிக்கப்பட்ட தனி நபராக இருத்தல் வேண்டும். கம்பனிகளைப் பொறுத்தவரையில் விண்ணப்பதாரி பணிப்பாளர்கள் சபையினால் அதிகாரமளிக்கப்பட்ட பணிப்பாளர்களில் ஒருவராக இருத்தல் வேண்டும். (பணிப்பாளர்கள் சபையின் தீர்மானம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்) பங்குடமை வியாபாரங்களைப் பொறுத்தவரை விண்ணப்பதாரி பங்குடமையாளர் ஒருவராக இருத்தல் வேண்டும். மேலும், பதிவினைப் பெற்றுக் கொள்வதற்காக விண்ணப்பதாரி அவராகவே சமுகமளித்தல் வேண்டும் எவ்வாறாயினும், கம்பனிகளைப் பொறுத்தவரை கம்பனியின் அங்கீகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி அல்லது விண்ணப்பதாரி இ. பே. சே. வரி பதிவு நோக்கத்திற்காக சமூகமளித்திருத்தல் வேண்டும். வெளிநாட்டுக் கம்பனிகளைப் பொறுத்தவரையில், விண்ணப்பத்தினைக் கணக்காய்வு நிறுவனம் அல்லது சட்டவாளர் அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**குறிப்பு** :

(அ) மீள் அளிப்புக்கான தகைமையினைக் கொண்டிருக்காத ஆட்கள் இ. பெ. சே. வரித் திட்டத்தின் கீழ் பதிவு செய்திருக்காத அவர்களின் வழங்குநர்களை இபெசேவ திட்டத்தில் பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளும்படி கோரப்பட்டுள்ளார்கள்.

(ஆ) பிற் திகதியிடப்பட்ட பதிவானது 14 நாட்களுக்கு மேற்படாத காலப்பகுதியினை மாத்திரம் கொண்டிருக்கும் வழங்குநர்கள் தொடர்பில் மட்டும் கவனம் செலுத்துகின்றது.

(இ) இந்த ஒழுங்குவிதியில் 1 ஆம் பந்தியின் (i) இலிருந்து (vii) வரையான விடயங்களில் குறிப்பீடு செய்யப்பட்ட எவரேனும் பதிவு செய்யப்பட்ட ஆள், **பதிவு செய்யப்பட்டு இனம் காணப்பட்ட கொள்வனவாளர்** எனப் பெயரிடப்படுவதுடன் **(இதனகத்துப்பின்னர் ப. இ. கொ. என அழைக்கப்படுவார்)**. அவரின் கொள்வனவானது இடைநிறுத்தப்பட்ட கொள்வனவாக அழைக்கப்படும்.

(ஈ) இந்த ஒழுங்குவிதிகளின் 1 ஆம் பந்தியின் விடயம் (i) இல் குறிப்பீடு செய்யப்பட்ட எவரேனும் பதிவு செய்யப்பட்ட ஆளுக்கு பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட கொள்வனவாளர் தகைமையினை வழங்குவதற்கு, அவர்களின் மொத்த வழங்கல்களின் 50% இற்கு அதிகமானவை உபாய அபிவிருத்தி கருத்திட்டத்திற்கு வழங்கப்பட்ட வழங்கல்கள் என உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம் (இதனகத்துப்பின்னர் உஇஆநா என அழைக்கப்படுவார்.) திருப்தியடைதல் வேண்டும். மேலும், அத்தகைய நோக்கத்திற்காக, தேவைப்படுத்தப்பட்டவாறான உறுதிப்படுத்தலினைப் பெற்றுக் கொள்வதற்காக வியாபார தளத்திற்கு விஜயமும் செய்யப்படுகின்றது.

(உ) இந்த ஒழுங்குவிதியின் 1 ஆம் பந்தியின் விடயம் (iv), (v), (vi) மற்றும் (vii) இன் கீழ் பதிவு செய்யப்பட்ட ஆளொருவருக்கு பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட கொள்வனவாளர் தகைமையினை வழங்குவதற்கு, மேற்கூறப்பட்ட விடயம் (iv), (v), (vi) அல்லது (vii) இல் குறிப்பீடு செய்யப்பட்ட அத்தகைய ஆளின் வழங்கல்கள் அவரின் மொத்த வழங்கல்களின் 50% இற்கும் அதிகமானதாகவுள்ளதா என்பது உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் கணனி முறைமையினூடாக உறுதிப்படுத்தலானது மேற்கொள்ளப்படுகின்றது. மேலும், அத்தகைய நோக்கத்திற்காக, தேவைப்படுத்தப்பட்டவாறான உறுதிப்படுத்தலினை பெற்றுக் கொள்வதற்காக வியாபார தளத்திற்கு விஜயமும் மேற்கொள்ளப்படுகின்றது.

(ஊ) இபெசேவ இன் கீழ் பதிவு செய்யப்பட்ட எவரேனும் தனி நபரொருவர், **பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட வழங்குநராக (இதனகத்துப்பின்னர் பஇவ என அழைக்கப்படுவார்.)** குறிப்பீடு செய்யப்படுகின்றார். எவரேனும் பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட ஆளொருவருக்கு மேற்கொள்ளப்பட்ட வழங்கலானது இடைநிறுத்தப்பட்ட வழங்கலாக அறியப்படுவதுடன் அத்தகைய வழங்கல் தொடர்பில் எழுகின்ற வரி விபரப் பட்டியலானது இடைநிறுத்தப்பட்ட வரி விபரப் பட்டியலாகக் கருதப்படும்.

(எ) விதித்துரைக்கப்பட்ட கருத்திட்டங்களில் ஈடுபடுகின்ற ஆளொருவரின் ஏதேனும் வழங்கல் மற்றும் உரிய அரசாங்க அதிகாரத்திற்கு வழங்கப்பட்ட அத்தகைய வழங்கலானது பெசேவ சட்டத்தின் முதலாவது அட்டவணையின் கீழ் விலக்களிப்புப் பெற்ற வழங்கலாக இருக்கின்றது. ஆனால் பெசேவ சட்டத்தின் பிரிவு 22(10) இன் நியதிகளில் வரி விதிக்கத்தக்க வழங்கல்களாக கருதப்படுகின்றன.

(ஏ) ஏதேனும் உபாய அபிவிருத்தி கருத்திட்டத்திற்கான பதிவு செய்யப்பட்ட ஆளொருவரின் மூலமான ஏதேனும் பொருட்கள் அல்லது சேவைகளின் வழங்கலானது பெசேவ சட்டத்தின் முதலாவது அட்டவணையின் கீழ் விலக்களிப்புப் பெற்ற வழங்கலாக இருக்கின்றது. ஆனால், பெசேவ சட்டத்தின் பிரிவு 22(10) இன் நியதிகளில் வரி விதிக்கத்தக்க வழங்கல்களாகக் கருதப்படுகின்றன.

(ஐ) பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட கொள்வனவாளராக இருப்பதற்குரிய தகைமையினைக் கொண்டுள்ள ஆளொருவரினால் விண்ணப்பமொன்று சமர்ப்பிக்கப்படுகையில், இடைநிறுத்தப்பட்ட வழங்கலின் மீது பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட வழங்குநருக்காக வழங்குவதற்காக இலங்கை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் வழங்கப்பட வேண்டிய வரவு வவுச்சர்களுக்குரிய இரண்டு ஆட்களின் (பிரசைகளல்லாதவர்களெனில் செல்லுபடியாகும் கடவுச்சீட்டு இல.) பெயர்கள் மற்றும் தே. அ. அ. இலக்கங்கள் என்பன விண்ணப்பப் படிவத்தில் வழங்கப்படுதல் வேண்டும். இந்த அதிகாரமளித்தலானது, விண்ணப்பத்தில் கையெழுத்திட்டுள்ள தனி நபரினால் ஆணையாளர் நாயகத்திற்கு எழுத்து மூல கோரிக்கை விடுக்கப்பட்டாலன்றி மாற்றம் செய்யப்பட முடியாது. அத்தகைய ஆள் பதிவு செய்யப்பட்ட ஆளுடன் தொடர்ந்தும் பணியாற்றாவிடின், இன்னொரு அதிகாரமளிக்கப்பட்ட ஆள் கோரிக்கையில் கையெழுத்திட முடியும். ஆனால் அத்தகைய ஆளின் தகைமையானது ஆவண ரீதியான சான்றின் மூலமாக நிரூபிக்கப்படுதல் வேண்டும்.

(ஒ) பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட கொள்வனவாளர்கள், பெசேவ மூலக்கூறினை இடைநிறுத்தும் இந்த ஒழுங்குவிதியின் 1 ஆம் பந்தியின் (i), (ii), (iii), (iv), (v) அல்லது (vi) ஆம் விடயங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் உரிய செயற்பாடு முன்னெடுப்பதற்காக பொருட்களைக் கொள்வனவு செய்யவோ அல்லது சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கான தகைமையினைக் கொண்டுள்ளார்கள். அத்தகைய கொள்வனவானது **குறித்துரைக்கப்பட்ட**

**நோக்கத்திற்காக** பயன்படுத்தப்பட்ட கொள்வனவாகக் கருதப்படும். பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட கொள்வனவாளர்கள் நியம விகித வழங்கல்களை மேற்கொள்வதற்கான தகைமையினையும் கொண்டுள்ளதுடன், ஆனால் குறித்த கலண்டர் மாதத்திற்கான அத்தகைய பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட எவரேனும் ஆளின் மொத்த பூச்சிய வீதமிடப்பட்ட வழங்கல்கள் மற்றும் இடைநிறுத்தப்பட்ட வழங்கல்கள் அவரின் மொத்த வழங்கல்களின் 50% இற்கும் குறைவானதாக இருத்தலாகாது. அத்தகைய சூழ்நிலையில் அவர் அதன் வரி விதிக்கத்தக்க வழங்கல்களுக்காக பயன்படுத்தப்படுகின்ற இடைநிறுத்தப்பட்ட நியதிகளின்கீழ் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்குரிய அல்லது சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்குரிய தகைமையினைக் கொண்டிருப்பதுடன் அத்தகைய கொள்வனவானது **குறித்துரைக்கப்பட்ட நோக்கமொன்றிற்காகப் பயன்படுத்தப்பட்ட கொள்வனவொன்றாகக் கருதப்படும்**.

(ஓ) இடைநிறுத்தப்பட்ட நியதிகளின்கீழ் கொள்வனவு செய்வதற்கு அதிகாரமளிக்கப்பட்ட பதிவு செய்யப்பட்ட கொள்வனவாளர்களின் பட்டியலானது (அதாவது, ப. இ. கொள்வனவாளர்கள் அல்லது ப. இ. வழங்குனர்/ப. இ. கொள்வனவாளர்கள்) உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் வெளியிடப்படும். பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட வழங்குநர் எவரேனும், கொள்வனவாளரானவர் பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட வழங்குநரா என்பதனை இத்தகவலைக் கொண்டு உறுதிப்படுத்திக் கொள்ளலாம். புதிய பதிவு செய்தல்கள், இரத்துச் செய்தல்கள், தகைமையில் ஏற்பட்ட மாற்றங்கள் மற்றும் இபெசேவ இன் கீழ் தடை செய்யப்பட்ட பதிவு செய்யப்பட்ட ஆட்களின் விபரங்கள் தொடர்பான தகவல்களைக் கொண்ட பட்டியலானது ஒவ்வொரு மாதத்தின் இறுதியிலும் புதுப்பிக்கப்பட்டு வெளியீடு செய்யப்படும். எனவே, அனைத்து பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட வழங்குநர்களும் மேற்படி தகவல்களை இணையத்தளத்தில் பார்த்துக் கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

(ஔ) வெளிநாட்டுக் கம்பனிகளைப் பொறுத்தவரையில், விண்ணப்பதாரி அல்லது கையெழுத்திடுபவர் அல்லது வரவு வவுச்சர் சேகரிப்பவர், கணக்காய்வு நிறுவனம் அல்லது சட்டவாளர் நிறுவனமெனில், அத்தகைய நிறுவனங்களின் உரிமையாளர் அல்லது பங்காளர்கள், இவ்வொழுங்கு விதியில் விதித்துரைக்கப்பட்ட வரி தொடர்பான விடயங்களுக்குப் பொறுப்பாவதுடன் சட்ட ரீதியாகக் கட்டுப்படுதலும் வேண்டும்.

### 3. பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட கொள்வனவாளர்களுக்கான விசேட ஒழுங்குவிதிகள்

#### 3.1 *இடைநிறுத்தப்பட்ட கொள்வனவுகள்*

(i) மூலப் பொருட்கள், மூலதனப் பொருட்கள் மற்றும் விசேட நோக்கத்திற்காக அல்லது விசேட நோக்கமெனக் கருதப்பட்ட ஒன்றிற்கான அனைத்துக் கொள்வனவுகளும் இடைநிறுத்தப்பட்ட கொள்வனவுகளாகக் குறிப்பீடு செய்யப்படுகின்றன. பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட கொள்வனவாளர்கள், அத்தகைய கொள்வனவுடன் தொடர்புடைய உள்ளீடுகளின் கொள்வனவென இனங்காணத்தக்க அத்தகைய கொள்வனவுகளாக இல்லாதிருப்பின் இபெசேவ பதிவு செய்யப்பட்ட ஆளிடமிருந்து சாதாரண வரி விபரப் பட்டியலின்கீழ் கொள்வனவு செய்வதற்கு பெசேவ சட்டத்தின் 22 ஆம் பிரிவின்கீழ் அனுமதிக்கப்படுவதில்லை.

(ii) இடைநிறுத்தப்பட்ட கொள்வனவானது, குறித்துரைக்கப்பட்ட நோக்கங்கள் அல்லது குறித்துரைக்கப்பட்ட நோக்கமெனக் கருதப்படுகின்ற தேவைப்பாட்டினைக் கொண்டிருத்தல் வேண்டும். பெசேவ சட்டத்தின் கீழ் (கொள்வனவு செய்த வேளையில் இனங்காண முடியாமல் போன பகுதியளவில் அனுமதிக்கப்பட்ட, இடைநிறுத்தப்பட்ட கொள்வனவுகளெனின்) அனுமதியளிக்கப்படாத ஏதேனும் விதிவிலக்கான வழங்கல் அல்லது ஏதேனும் பெசேவ உள்ளீட்டு கடனுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ள அத்தகைய இடைநிறுத்தப்பட்ட கொள்வனவுகளாயின், சட்டத்தின் 22 ஆம் பிரிவின் கீழ் குறித்துரைக்கப்பட்டவாறான சீராக்கலொன்று மேற்கொள்ளப்படுதல் வேண்டும். பதிவு செய்யப்பட்ட ஆளினால் சீராக்கல் எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்காவிடின், பெசேவ சட்டத்தின் 31 ஆம் பிரிவின் கீழ் பெறுமதி மதிப்பீடொன்று திணைக்களத்தினால் வழங்கப்பட முடியும். (அத்தகைய பெறுமதி மதிப்பீடு மீது ஏதேனும் தண்டப் பணத்தினை விலக்களிப்பதில்லையெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.) வரி செலுத்தத்தக்க வழங்கல்களுக்காகப் பயன்படுத்தப்பட்டுள்ள இடைநிறுத்தப்பட்ட கொள்வனவுகளாயின், ஏதேனும் உள்ளீட்டு வரி கழிக்கப்படாமல் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு உரிய வெளியீட்டு வரியானது முழுமையாகச் செலுத்தத்தக்கதாக இருப்பதால் சீராக்கல் எதுவும் மேற்கொள்ளப்படுவதில்லை (மேலேயுள்ளவாறு) எவ்வாறாயினும், ஏதேனும் இடைநிறுத்தப்பட்ட கொள்வனவுகள் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காக அல்லது ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட நோக்கமாகக் கருதப்படக் கூடியவற்றிற்குப் பயன்படுத்தப்பட்டிருக்காத ஏதேனும் இடைநிறுத்தப்பட்ட கொள்வனவுப் பெறுமதியானது மற்றும் அதன் மூலமான மொத்த இலாபம் என்பன வரி செலுத்தத்தக்க வழங்கலாக கருதப்படுவதுடன் பெறுமதி மதிப்பீடானது திணைக்களத்தினால் பெசேவ சட்டத்தின் 31 ஆம் பிரிவின் கீழ் வழங்கப்படுவதுடன் அது தொடர்பான தண்டப் பணமானது விலக்களிக்கப்படவும் மாட்டாது.

(iii) வழங்குநர்களினால் வழங்கப்பட்ட பெசேவ இடைநிறுத்தப்பட்ட விலை விபர பட்டியல்களின் பிரதிகள் கொள்வனவினை நிரூபிப்பதற்கான மூல ஆவணமான ஆகக் குறைந்தது ஐந்து வருட காலப்பகுதிக்காவது பாதுகாத்து வைக்கப்படுதல் வேண்டும். இடைநிறுத்தப்பட்ட பெசேவ மூலக்கூறும் தேவைப்படும்போது பெறத்தக்கதாக பாதுகாப்பாகப் பேணப்படுதல் வேண்டும்.

*3.2* ***வரவு வவுச்சர்கள்***

(i) **பதிவுசெய்யப்பட்ட இனங்காணப்பட்ட கொள்வனவாளர்களுக்கு திணைக்களத்தினால் தொடர் கட்டளையுடன் கூடிய இலகுபடுத்தப்பட்ட பெசேவ கடன் வவுச்சர்கள்** வழங்கப்படுகின்றன. இலகுபடுத்தப்பட்ட பெசேவ கடன் வவுச்சர்கள் புத்தகமானது 50 வரவு வவுச்சர்களைக் கொண்டிருக்கும். உரிய வழங்குநர்களுக்கு கடன் வவுச்சர்களை வழங்குகையில் அத்தகைய வரவு வவுச்சர்களை இரண்டு அதிகாரமளிக்கப்பட்ட ஆட்களினால் (கையெழுத்தாளர்கள்) கையெழுத்திடப்படுதல் வேண்டும். எனவே, அத்தகைய இபெசேவ வரவு வவுச்சர்கள் பெறப்படும்போது ஐந்து கையெழுத்தாளர்களின் பெயர்கள், அவர்களின் பதவிகள், மாதிரி கையொப்பங்கள் மற்றும் தேசிய அடையாள அட்டைகளின் பிரதிகள் என்பன திணைக்களத்திற்கு வழங்கப்படுதல் வேண்டும். அதனைத் தொடர்ந்து அத்தகைய கையெழுத்துக்களில் ஏதேனும் மாற்றம் ஏற்படின் முன்கூட்டியே அறிவிக்கப்படுதல் வேண்டும். இத்தகவலானது விண்ணப்பத்தில் கையெழுத்திட்டுள்ள ஆளினால் ஆணையாளர் நாயகத்திற்கு கிடைக்கத்தக்கதாக அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். அத்தகைய ஆளானவர் பதிவு செய்யப்பட்ட ஆளுடன் தொடர்ந்தும் பணியாற்றவில்லையெனில், அவ்வறிவித்தலில் இன்னொரு ஆள் கையெழுத்திட முடியும். ஆனால், அதிகாரமளிக்கப்பட்டவராக கையெழுத்திடுவதற்கு அத்தகைய ஆளின் தகைமையானது ஆவண மூலமான சான்றின் மூலமாக நிரூபிக்கப்படுதல் வேண்டும்.

(ii) அதனைத் தொடர்ந்து பதிவுமூலச் சான்றிதழ், வரி விடுவிப்பு சான்றிதழ் மற்றும் படிவம் SVAT 9 ஆகிய ஆவணங்களுடன் மேற்கொள்ளப்பட்ட விண்ணப்பம் தொடர்பில் கடன் வழங்குதலானது மேற்கொள்ளப்படும். விண்ணப்பத்தினைத் திணைக்களத்தின் இணையத்தளத்திலிருந்து தரவிறக்கம் செய்து கொள்ளவும் முடியும். வரவு வவுச்சர்களின் புதிய தொடர் கோரப்படுகின்றபோது பயன்படுத்திய வரவு வவுச்சர்களின் பிரதிகள் இடைநிறுத்தப்பட்டு வழங்குநர்களின் பட்டியல்களுடன் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(iii) பதிவுசெய்யப்பட்டு இனங்காணப்பட்ட ஆளானவர், அத்தகைய கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்ட ஏதேனும் கலண்டர் மாதத்தின் இறுதியிலிருந்து 15 நாட்களுக்கு குறையாமல் பதிவு செய்யப்பட்டு, இனங்காணப்பட்ட வழங்குநருக்கு இடைநிறுத்தப்பட்ட கொள்வனவுகள் மீதான வரவு வவுச்சரை வழங்குமாறு கோரப்படுவது SVAT படிவம் 4 மற்றும் 5 இன் சமர்ப்பித்தலானது வழங்கல்கள் மேற்கொள்ளப்படும் உரிய கலண்டர் மாதத்தின் இறுதியிலிருந்து 10 நாட்களினுள் உரிய பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்டு ஆளிடம் சமர்ப்பிக்கப்படுகின்றன. ஏதேனும் கலண்டர் மாத காலப்பகுதியில் வழங்குநர் ஒருவரினால் மேற்கொள்ளப்படும் மொத்த கொள்வனவுச் செலவுகளை உள்ளடக்கும் வகையில் ஒரு வரவு வவுச்சரை வழங்குமாறு பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட ஆள் கோரப்படுகின்றனர். எவ்வாறாயினும், முறையற்ற வழங்குநர்கள் தொடர்பில் கொடுக்கல் வாங்கல் மேற்கொள்ளப்படும். அச்சந்தர்ப்பத்திலேயே வரவு வவுச்சர்கள் வழங்கப்படலாம். பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட கொள்வனவாளர் வழங்கப்பட்ட அனைத்து வவுச்சர்களின் பிரதிகளையும் பேணிப் பாதுகாக்குமாறு கேட்கப்படுகின்றார்.

(iv) வங்கி கொடுக்கல் வாங்கல்களைப் பொறுத்தவரையில், பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட கொள்வனவாளர்கள் அத்தகைய கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் வங்கியினால் இபெசேவ கடன் வவுச்சர்களைச் சமர்ப்பிப்பதற்கு அல்லது அத்தகைய கொடுக்கல் வாங்கல் தொடர்பில் வங்கியினால் SVAT 4 மற்றும் 5 ஆம் இலக்கப் படிவங்களின் முறையற்ற வகையில் சமர்ப்பிக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்பட்ட மாத இறுதியிலிருந்து 7 நாட்களினுள் செலுத்துவதற்குக் கட்டுப்படுகின்றார்.

(v) பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட கொள்வனவாளர்கள் வரவு வவுச்சர்களை ஏற்றுக் கொள்வதற்கென உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தினால் விசேட அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ள ஆட்களுக்கு (இடைநிறுத்தப்பட்ட வழங்கல் தொடர்பில் SVAT 4 SVAT 5 ஆகிய படிவங்களைச் சமர்ப்பிக்காமல்) வரவு வவுச்சர்களை வழங்குமாறு கேட்கப்படுகின்றனர். இது தொடர்பில், இத்தகைய அங்கீகாரமானது தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை, வீதி அபிவிருத்தி அதிகார சபை, இலங்கைக் காப்புறுதி மற்றும் கைத்தொழில் மற்றும் தொழில்நுட்ப நிறுவனம் என்பவற்றிற்கு ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது.

(vi) பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட கொள்வனவாளர்களினால் கடன் வவுச்சர்கள் வழங்கப்படாமை அல்லது செயன்முறையின்போது மற்றைய தரப்புக்கு பாதிப்பு ஏற்படும் வகையிலான ஏதேனும் நடத்தைகளான, உரிய நேரத்தில் ஆணையாளர் நாயகத்திற்கு, அவர்களுக்குத் தேவையான அறிக்கைகளினைச் சமர்ப்பிக்காமை போன்றவை பெசேவ

சட்டத்தின் நியதிச்சட்ட ஏற்பாடுகளின் கீழ் கடுமையாகக் கையாளப்படும். மேலும், உரிய நேரத்தில் கடன் வவுச்சர்களைச் சமர்ப்பிக்காமை தொடர்பில் வழங்குநர்களிடமிருந்து கிடைக்கப்பெறும் முறைப்பாடுகளை ஆராய்ந்த பின்னர் குறித்த வழங்குநர்களுக்கு அத்தகைய கவனயீனத்தால் பாதிப்பு ஏற்பட்டுள்ளதை ஆணையாளர் நாயகத்திற்கு திருப்திகரமாக நிரூபிக்கப்படுமிடத்து குறித்த பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட ஆள் தொடர்பில் மதிப்பீடொன்று மேற்கொள்ளப்படக்கூடும் அல்லது அத்தகைய பதிவு செய்யப்பட்ட ஆள் பட்டியலிலிருந்து நீக்கப்படலாம்.

(vii) உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகமானவர், ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியானது மேலே விடயம் (vi) இல் குறிப்பிடப்பட்டவாறானவற்றுடன் இணங்கியிருக்காது காணப்படுமாயின், எந்நேரத்திலும் எவரேனும் பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட கொள்வனவாளருக்கு இலகுபடுத்தப்பட்ட பெசேவ வரவு வவுச்சர்களை வழங்க மறுப்பு தெரிவிக்கலாம்.

(viii) தவறு காரணமாக ஏதேனும் கடன் வவுச்சர் இரத்துச் செய்யப்படுமிடத்து அத்தகைய இரத்துச் செய்தலானது இலகுபடுத்தப்பட்ட பெசேவ வரவு வவுச்சர்களுக்கான கோரிக்கை விடுக்கப்பட்ட விண்ணப்பத்தில் வெளிப்படுத்தல் வேண்டுமென்பதுடன் வரவு வவுச்சரின் மூலப் பிரதியானது வரவு வவுச்சர் ஏட்டில் இணைக்கப்படுதலும் வேண்டும்.

(ix) கொள்வனவுகள், அக்கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்ட அதே மாத காலப்பகுதியினுள் எவரேனும் வழங்குநருக்கு திருப்பியனுப்பி வைக்கப்பட்டிருக்குமாயின், அத்தகைய வழங்குநரின் விபரங்கள் குறித்த மாதத்தில் வழங்கப்பட்ட வரவு வவுச்சர் இலக்கம் என்பவற்றுடன் SVAT 6(a) ஆம் இலக்க படிவத்தில் வெளிப்படுத்தப்படல் வேண்டும். கொள்வனவின் மூலப் பெறுமதிப் படிவம் இபெசேவ 6 இல் வெளிப்படுத்தப்படுதல் வேண்டும்.

(x) முன்னதாக வெளிப்படுத்தப்பட்ட கொள்வனவு தொடர்பில் ஒத்திசைவான காலப்பகுதியில் எவரேனும் வழங்குநருக்கு திருப்பி அனுப்பி வைக்கப்பட்டிருந்த கொள்வனவுகளாயின், அத்தகவலானது அது தொடர்பில் ஏற்கனவே வழங்கப்பட்ட வரவு வவுச்சர் இலக்கத்துடன் SVAT 6(a) ஆம் இலக்கப் படிவத்தில் வெளிப்படுத்தப்படுதல் வேண்டும். மேலும், அத்தகைய விபரத் திரட்டுக்களின் பின்னர் தேறிய கொள்வனவுகளுக்குரிய நடைமுறை காலப்பகுதிக்கான வரவு வவுச்சர் இலக்கத்தினை வெளிப்படுத்துவது அவசியமாகும். அத்தகைய வழங்கலின் குறித்த மாத காலப்பகுதிக்குரிய ஏதேனும் கொள்வனவு விபரத்திரட்டினை கவனத்தில் கொள்ளாது கொள்வனவின் மூலப் பெறுமதி படிவம் SVAT 6 இல் வெளிப்படுத்தப்படல் வேண்டும். திருப்பியனுப்பி வைக்கப்பட்ட கொள்வனவின் பெறுமதியானது நடைமுறை ஆண்டு காலப்பகுதிக்குரிய வழங்கல்களைவிட அதிகமாயின் எதிர்மறைப் பெறுமதியொன்றினைக் கொண்ட வரவு வவுச்சரே எழுதப்பட வேண்டியிருக்கும்.

(xi) நடைமுறை மாதத்தில் கொள்வனவுகள் எதுவும் காணப்படாது, ஆனால் முன்னதாக வெளிப்படுத்தப்பட்ட கொள்வனவுகளுடன் தொடர்புடைய மாத காலப்பகுதியில் திருப்பியனுப்பி வைக்கப்படும் கொள்வனவுகளாயின் எதிர்மறைப் பெறுமதியில் வழங்கப்படும் நடைமுறை வரவு வவுச்சர் இலக்கத்துடன் சேர்ந்தவாறான அத்தகைய கொள்வனவுகளுக்காக முன்னதாக வழங்கப்பட்ட வரவு வவுச்சர் இலக்கத்தினையும் SVAT 6(a) ஆம் இலக்க படிவத்தில் வெளிப்படுத்துதல் வேண்டும்.

(xii) வழங்கல்களின் தேறிய பெறுமதி மீது எழுதப்பட வேண்டியிருக்கும் வரவு வவுச்சரானது மேலே விடயம் (ix), (x) அல்லது (xi) இல் குறிப்பிடப்பட்ட ஏதேனும் சூழ்நிலை தொடர்பில், இபெசேவ 4 ஆம் இலக்க படிவத்தில் வழங்கப்பட்ட பெறுமதியின் அடிப்படையிலானதாக அமைதல் வேண்டும்.

(xiii) செலவுத் தாளாயின், அது தொடர்பான தகவலும் மறைப் பெறுமதியாக SVAT 6(a) இல் வெளிப்படுத்தப்படல் வேண்டும்.

### 3.3 பெசேவ பொருள் விபரத்திரட்டு

#### 3.3.1 கொள்வனவுப் பெறுமதி

(i) இடைநிறுத்தப்பட்ட வரிப் பட்டியலில் பெறப்பட்ட மாற்றங்களுக்கான பெசேவ பொருள் விபரத்திரட்டின் கூடு "J" இல் இடைநிறுத்தப்பட்ட கொள்வனவுகளின் கீழ் கொள்வனவுப் பெறுமதி வெளிப்படுத்தப்படுதல் வேண்டும். குறித்த மாதத்திற்காக வெளிப்படுத்தப்பட்டிருக்காத அத்தகைய ஏதேனும் கொள்வனவினைப் பொறுத்தவரையில் 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 28 ஆம் பிரிவின் நோக்கத்திற்காக மேற்கொள்ளப்படுகின்ற கணக்குகளுக்கான அதே மதிப்பீட்டு ஆண்டினுள் தொடர்ந்து வருகின்ற மாதமொன்றில் இதனை வெளிப்படுத்த முடியும். இடைநிறுத்தப்பட்ட பெசேவ தொகையானது கூடு "K" இல் பதியப்படுதல் வேண்டும். இடைநிறுத்தப்பட்ட

கொள்வனவுகளின் மீதான பெசேவ விதிக்கப்படாத சந்தர்ப்பங்களில் அது வெளியீட்டு வரியிலிருந்து கழிக்கப்பட முடியாது. அந்த வகையில் இடைநிறுத்தப்பட்ட வரியானது மீளளிக்கப்படவும் மாட்டாது. உப பந்தி 3.1 இன் வகையீடு (ii) இல் குறிப்பிடப்பட்டவாறு பெசேவ சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் அனுமதிக்க முடியாத **இடைநிறுத்தப்பட்ட நியதிகளின்**கீழ் மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகள் மீதான ஏதேனும் உள்ளீட்டு வரியினைப் பொறுத்தவரையில், இறக்குமதிகள் அல்லது உள்நாட்டு கொள்வனவுகளுடன் தொடர்புடைய அனுமதிக்கத்தகாத உள்ளீட்டு வரி செலவினைப் பதிவு செய்தலுக்கான பெசேவ பொருள் விபரத்திரட்டினை 8A இல் கூட்டில் வெளிப்படுத்துதல் வேண்டும்.

(ii) பெசேவ பொருள் விபரத்திரட்டிலுள்ள இடைநிறுத்தப்பட்ட கொள்வனவுகளுக்கான பெறுமதியானது, படிவம் SVAT 6 இலுள்ள கொள்வனவுப் பெறுமதிக்கும் படிவம் SVAT 6(a) இலுள்ள மீள்நிரப்பப்பட்ட கொள்வனவுப் பெறுமதிக்குமிடையிலான வேறுபாடாகும்.

3.3.2 **வழங்கல் பெறுமதி**

(i) ஏதேனும் உபாய அபிவிருத்திக் கருத்திட்டத்திற்கான பொருட்கள் அல்லது சேவைகளை வழங்குகின்ற எவரேனும் பதிவுசெய்யப்பட்டு இனங்காணப்பட்ட கொள்வனவாளர், செலுத்தத்தக்க வரி எனக் கருதப்படுபவையுடன் பெசேவ விபரத்திரட்டின் கூடு A2 இலுள்ள அத்தகைய வழங்கலினை வெளிப்படுத்தப்படுதல் வேண்டும். அத்துடன் வரி வரவாகக் கருதப்படுபவை R2 இலும் வெளிப்படுத்தப்படுதல் வேண்டும்.

(ii) விசேட கருத்திட்டத்தில் ஈடுபடுகின்றவரும் உரிய அரசாங்க அதிகாரத்திற்கு வழங்கலினை மேற்கொள்கின்ற எவரேனும் பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட கொள்வனவாளர் செலுத்தத்தக்க வரி எனக் கருதப்படுபவையுடன் பெசேவ விபரத்திரட்டின் கூடு A1 இலுள்ள அத்தகைய வழங்கலினை வெளிப்படுத்துதல் வேண்டும். அத்துடன் வரி வரவு எனக் கருதப்படுபவை R1 இலும் வெளிப்படுத்தப்படுதல் வேண்டும்.

3.4 **மீளளிப்புக்கள்**

(i) பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட கொள்வனவாளர் பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட வழங்குநரிடமிருந்து கொள்வனவு செய்யுமாறு கோரப்படுகின்றார். மீளளிப்புக்கள், சுங்கப் பணிப்பாளர் நாயகத்திற்கு மேற்கொள்ளப்பட்ட ஏதேனும் முற்பணங்கள் மற்றும் கீழே விடயம் (iii) இல் தரப்பட்டுள்ள ஏதேனும் சூழ்நிலைகளில் செலுத்தப்பட்ட பெசேவ தவிர்ந்த ஏனைய சூழ்நிலைகளின் கீழ் மேற்கொள்ளப்படுவதில்லை.

(ii) கீழே வகையீடு (iii) இன் பொதுத் தன்மைக்கு பங்கம் ஏற்படாமல் பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட கொள்வனவாளர் பெசேவ பதிவு செய்யப்பட்ட வழங்குநரொருவரிடமிருந்து பெசேவ உள்ளீட்டினைக் கோரும் பொருட்டு சாதாரண பெவேச பொருள் விபரப்பட்டியலினை ஏற்றுக் கொள்வதற்கு அனுமதியளிக்கப்படலாகாது. அத்தகைய பொருள் விபரப்பட்டியலுக்குப் பதிலாக, பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட ஆளொருவர் பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட வழங்குநராக இபெசேவ செயல் திட்டத்தில் பதிவு செய்வதன் மூலம் இடைநிறுத்தப்பட்ட வரிப் பொருள் விபரப் பட்டியலொன்றினை வழங்குவதற்கு அத்தகைய வழங்குநர் ஒருவரிடம் வேண்டுகோள் விடுப்பார்.

(iii) பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட கொள்வனவாளர்கள், பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட வழங்குநர் அல்லாத வேறு எவரேனும் ஆளிடமிருந்து பொருட்கள் அல்லது சேவைகளைப் பெற்றுக் கொள்ளுமிடத்து உள்ளீட்டின் (ஏதேனும்) மிகையினைப் பெறுவதற்கு உரித்துடையவர்களாவர். எவ்வாறாயினும், பெசேவ செலுத்தப்பட்ட அத்தகைய வழங்குநரினால் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்காத பெசேவ மூலக்கூறாறக இது காணப்படுமாயின், ஆணையாளர் நாயகமானவர் அத்தகைய பெசேவ மூலக்கூற்று மீளவும் அறவிடப்படும் வரையில் அத்தகைய மீளளிப்புக்களின் கோரிக்கைகளை நிறுத்தி வைக்கலாம்.

(iv) பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட ஆளொருவரிடமிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவாக அது காணப்படுமாயின், அத்தகைய ஆட்களிடமிருந்து பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட கொள்வனவாளர்களினால் பெறப்பட்ட வரி விலை விபரப்பட்டியல் தொடர்பில் மீளளிப்புச் செய்யப்பட மாட்டாது.

3.5 **ஆவணங்கள்**

(i) வழங்குநர்களினால் வழங்கப்படும் பொருட்கள்/சேவைகள் பிரகடனப் படிவம் SVAT 4 மற்றும் குறைநிரப்பிப் படிவங்கள் SVAT 5, 5(a) மற்றும் 5(b) என்பன பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட கொள்வனவாளருடன் பரஸ்பரம் இணக்கம் காணப்பட்டு ஆணையாளர் நாயகத்திற்குச் சமர்ப்பிப்பதற்காகப் பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட வழங்குநருக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

(ii) பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட கொள்வனவாளர்கள் இடைநிறுத்தப்பட்ட கொள்வனவுகளின் பொழிப்புப் படிவமான SVAT 6 இனைச் சமர்ப்பிக்குமாறு கோரப்படுகின்றனர்.

(iii) பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட கொள்வனவாளர்கள் மொத்த வெளியீட்டு வெளிப்படுத்தல் படிவமான இபெசேவ 3 இனை வழங்குமாறு கோரப்படுகின்றனர்.

(iv) அனைத்துப் பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட கொள்வனவாளர்களும் அனைத்துத் தேவையான படிவங்கள் மற்றும் (இணையத்தளத்திலிருந்து பதிவு இறக்கம் செய்து பெற்றுக் கொள்ளக்கூடிய) பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புதல் கடிதத்தில் இரண்டு பிரதிகளுடன் கலண்டர் மாதத்துடன் தொடர்புடைய அனைத்து விபரங்களையும் அனுப்பி வைத்தல் வேண்டும். SVAT 3, 6 மற்றும் 6(a) போன்ற அனைத்துப் படிவங்களும் தொடர்ந்து வரும் மாதத்தின் இறுதித் திகதியன்று அல்லது அதற்கு முன்னதாக இலகுபடுத்தப்பட்ட பெசேவ பிரிவில் கையளிக்கப்படுதல் வேண்டும். மேலும், உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் இணையத்தளத்தில் காணப்படுகின்ற இலத்திரனியல் வடிவில் தயாரிக்கப்பட்ட SVAT 6(a) மற்றும் 6(b) போன்ற எக்ஸெல் கோவைகள் தொடர்ந்து வரும் மாதத்தின் இறுதித் திகதியன்று அல்லது அதற்கு முன்னதாக மின்னஞ்சலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

(v) அத்தகைய படிவங்களில் ஏதேனுமொன்று, ஒரு கலண்டர் மாதத்திற்கும் மேலான தகவல்களைக் கொண்டிருத்தலாகாது.

(vi) பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட எவரேனும் கொள்வனவாளர் மேற்படி ஒழுங்குவிதியின் 1 ஆம் பந்திக்கான குறிப்பான வரைவிலக்கணப்படுத்தப்பட்டவாறு ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட நோக்கம் அல்லது குறித்துரைக்கப்பட்ட நோக்கமென கருதப்பட்டவற்றிற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ள இறக்குமதிகள் அல்லது உள்நாட்டில் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் மற்றும் சேவைகளினைச் செவ்வைப் பார்ப்பதற்காகத் திணைக்களத்தின் அதிகாரிகளுக்கு வசதிப்படுத்துவதற்கான கணக்கிணக்கக் கூற்றினைத் தயாரிக்குமாறு வேண்டப்படுமிடத்து அதனைத் தயாரித்தல் வேண்டும்.

(vii) பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட கொள்வனவாளர் மூன்று உப தலைப்புக்களின்கீழ் (அதாவது மூலப்பொருட்கள், மூலதனப் பொருட்கள் மற்றும் பெறப்பட்ட/நுகரப்பட்ட ஏனைய பொருட்களும் சேவைகளும்) இடைநிறுத்தப்பட்ட நியதிகள் வழங்கப்படுகின்ற அனைத்து விலை விபரப் பட்டியல் இலக்கங்களின்கீழ் மேற்கொள்ளப்படுகின்ற கொள்வனவுகளின் அட்டவணையொன்று தொடர்பில் கோரிக்கையினைச் சமர்ப்பிக்குமாறு கேட்கப்படுகின்றார்.

(viii) பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட கொள்வனவாளர் ஏதேனும் இடைநிறுத்தப்பட்ட வழங்கலினை மேற்கொண்டிருப்பின், அத்தகைய பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட கொள்வனவாளர் இந்த ஒழுங்குவிதியின் 6 ஆம் பந்தியில் விதித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளுடன் இணங்குதல் வேண்டுமெனக் கேட்கப்படுகின்றார்.

(ix) உரிய நேரத்தில் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்குப் பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட வழங்குநரினால் தேவையான படிவங்கள் சமர்ப்பிக்கத் தவறுவதானது மற்றைய தரப்புக்கான செயல்முறையில் ஏதேனும் தாக்கத்தினை ஏற்படுத்துமிடத்து பெசேவ சட்டத்தின் நியதிச்சட்ட ஏற்பாடுகளின்கீழ் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

4. **ஆவணப்படுத்தலுடன் தொடர்புடைய உபாய அபிவிருத்தி கருத்திட்டத்திற்கான விசேட ஒழுங்குவிதிகள்.**- உபாய அபிவிருத்தி கருத்திட்டமானது கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் அல்லது சேவைகளின் திகதி, கொள்வனவு செய்யப்பட்ட அத்தகைய பொருட்கள் அல்லது சேவைகளுக்குரிய ஆளின் பெயர் மற்றும் முகவரி, அத்தகைய ஆளின் வரி செலுத்துநர் அடையாள இலக்கம், அத்தகைய வழங்கல்களின் பெறுமதி, பெசே வரிக்காக பதிவு செய்யப்படாத அத்தகைய உபாய அபிவிருத்தி கருத்திட்டம் தவிர்ந்த விடயம் தொடர்பான விபரங்களை வெளிப்படுத்துகின்ற SVAT 06AA படிவத்தினைச் சமர்ப்பிக்குமாறு கேட்கப்படுகின்றார். இந்தப் படிவமானது இக்கருத்திட்டத்திற்கு வழங்கப்பட்ட விலக்களிப்பு பெற்ற வழங்கலினை உறுதிப்படுத்துவதற்காக மட்டுமே சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

5. **பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட கொள்வனவாளர்களுக்கான விசேட ஒழுங்குவிதிகள்**

***அந்நியச் செலாவணியல்லா தயாரிப்பாளர்கள் (ஒப்படை கொள்வோர்கள்)***

(i) பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட கொள்வனவாளர் ஏற்றுமதி செய்யப்படும் இறுதிப் பொருளுக்குரிய வெளிநாட்டு கொள்வனவாளரின் சார்பில் உள்நாட்டு வழங்குநரிடமிருந்து (ப. இ. வ.) அந்நியச் செலாவணியல்லா அல்லது காசல்லா அடிப்படையில் பொருட்கள் அல்லது சேவைகளைப் பெறுகின்ற நேரடி ஏற்றுமதியாளரொருவராயின், அத்தகைய

பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட கொள்வனவாளர் அந்நியச் செலாவணியல்லா தயாரிப்பாளராக (ஒப்படை கொள்வோர்) பெயரிடப்படுவதுடன் காசல்லா அடிப்படையிலான வழங்கல் மீது பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட வழங்குநரினால் ‘‘அந்நியச் செலாவணியல்லா இடைநிறுத்தப்பட்ட வரி விலை விபரப் பட்டியல்’’ ஒன்று வழங்கப்படுகின்றது. அதன் பின்னர் அந்நியச் செலாவணியல்லா தயாரிப்பாளர் தயாரிப்பு நோக்கம் மற்றும் வெளிநாட்டுக் கொள்வனவாளருக்கான பொருட்களின் ஏற்றுமதிக்காக மட்டுமே பயன்படுத்தப்படுகின்ற அத்தகைய வழங்கல்கள் அளிக்கப்பட்ட அத்தகைய வழங்குநர்களுக்கு (ப. இ. வ.) உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திடமிருந்து பெறப்பட்ட ‘‘அந்நியச் செலாவணியல்லா வரவு வவுச்சர்’’ ஒன்றினை வழங்குதல் வேண்டும். பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட கொள்வனவாளர்கள் தகவலுக்காக, SVAT 6(b) மற்றும் SVAT 6(c) ஆகிய படிவங்களை ஆதரவு ஆவணங்களாக வைத்திருத்தல் வேண்டும்.

(ii) அந்நியச் செலாவணியல்லா தயாரிப்பாளராகவிருக்கின்ற பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்டுள்ள கொள்வனவாளர் திணைக்களத்திற்கு அந்நியச் செலாவணியல்லா கடன் வவுச்சர்கள் தொடர்பில் SVAT 6(b) மற்றும் SVAT 6(c) ஆகிய படிவங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் அவை உரித்தளிக்கப்பட்டுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

(iii) அந்நியச் செலாவணியல்லா கொள்வனவுகளின் பெறுமதியானது பெசேவ பொருள் விபரத்திரட்டின் கூடு "J1" இல் அந்நியச் செலாவணியல்லா கொள்வனவுகளின்கீழ் பிரகடனப்படுத்தப்படல் வேண்டும். இடைநிறுத்தப்பட்ட பெசேவ தொகையானது "K1" இல் பதிவு செய்யப்படுதல் வேண்டும்.

(iv) ஏனைய அனைத்து ஒழுங்குவிதிகளும் நடைமுறைகளும் பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட கொள்வனவாளர்களுக்கேற்புடையதான விதத்தில் பிரயோகிக்கப்படல் வேண்டும்.

**6. பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட வழங்குநர்களுக்கான விசேட ஒழுங்குவிதிகள்**

**6.1 இடைநிறுத்தப்பட்ட வரி விலை விபரப் பட்டியல்**

(i) பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட கொள்வனவாளர்களுக்கான வழங்கல்கள் ‘இடைநிறுத்தப்பட்ட பெறுமதி சேர் வரி’ ஆக பெறுமதி சேர் வரி மூலக்கூறு காண்பிக்கும் இடைநிறுத்தப்பட்ட வரி விலை விபரப் பட்டியல் (SVAT 2) மேற்கொள்ளப்பட முடியும். அத்தகைய **இடைநிறுத்தப்பட்ட** விலை விபரப் பட்டியல் எவ்வித தாமதமுமின்றி வழங்கப்படுதல் வேண்டும். பதிவு செய்யப்பட்ட ஆளொருவருக்கு இடைநிறுத்தப்பட்ட நியதிகளின் கீழ் வழங்கல்கள் மேற்கொள்ள முன்னதாக பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட வழங்குநர்கள் அத்தகைய நபர் ஓர் பதிவு செய்யப்பட்டு இணங்காணப்பட்ட கொள்வனவாளரொருவர் என்பதனை உறுதிப்படுத்துமாறு கேட்கப்படுகின்றனர். பதிவு செய்யப்பட்டு இணங்காணப்பட்ட கொள்வனவாளர்கள் மற்றும் பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட கொள்வனவாளர்கள், பதிவு செய்யப்பட்டு இணங்காணப்பட்ட வழங்குநர்கள் ஆகியோரின் பெயர்ப்பட்டியல்கள் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

(ii) வரி விபரப் பட்டியலானது, பெசேவ சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் உள்ளீடு அனுமதியளிக்கத்தகாத எச்சந்தர்ப்பத்திலேனும் பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட கொள்வனவாளர் எவருக்கேனும் வழங்கப்பட மாட்டாது.

(iii) உபாய அபிவிருத்தி கருத்திட்ட அமுலாக்கல் காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட வரி விதிக்கத்தக்க வழங்கல்களாக கருதப்படுகின்ற ஏதேனும் வழங்கல் தவிர்ந்த பெசேவ இலிருந்து விலக்களிக்கப்பட்ட பொருட்கள் இபெசேவ திட்டத்தின் கீழ் வழங்கப்பட முடியாது.

(iv) வழங்கல்கள், காசு அடிப்படையிலான கணக்கீட்டுக்கான பெசேவ சட்டத்தின் 23 ஆம் பிரிவின் கீழ் அங்கீகாரம் பெறப்பட்டிருக்காவிடின் சேர்ந்த அடிப்படையில் கொள்ளப்படுதல் வேண்டும். அந்த வகையில் வழங்குநரினால் பெறப்படுகின்ற கொடுப்பனவின் காலப்பகுதியானது வழங்கல் காலப்பகுதியாகும். எவ்வாறாயினும், காசு அடிப்படையிலோ அல்லது சேர்ந்த அடிப்படையிலோ பெறப்படும் முற்பணம், ஏதேனும் அத்தகைய கொடுப்பனவு பெறப்படுகின்ற வரி விதிக்கத்தக்க காலப்பகுதியில் வெளிப்படுத்துதல் வேண்டும்.

(v) அனைத்து ப. இ. வ. களும் பெசேவ சட்டத்தின் குறித்துரைக்கப்பட்டவாறான வழங்கல் காலப்பகுதியினைப் பின்பற்றுதல் வேண்டும். எனவே அவ்வாறு இடைநிறுத்தப்பட்ட வழங்கல்கள் அந்த அடிப்படையிலேயே வெளிப்படுத்தப்படுதல் வேண்டும்.

(vi) பொருட்கள்/சேவைகள் பிரகடனப்படுத்தல் படிவம், SVAT 04 குறைநிரப்புப் படிவம் SVAT 05 (இடைநிறுத்தப்பட்ட பெசேவ வரவு குறிப்புக்கள் படிவம் SVAT 05 (a) மற்றும் இடைநிறுத்தப்பட்ட பெசேவ செலவுக் குறிப்புக்கள் படிவம் SVAT 05 (b) ஏற்புடையதாயின்) பஇவ இனால் மேற்கொள்ளப்பட்ட வழங்கல்கள் உரிய மாதத்தின் இறுதியிலிருந்து 10 நாட்களினுள் கொள்வனவாளர்களுக்கு வழங்கப்படுதல் வேண்டும் என்பதுடன் பஇகொ இடமிருந்து உறுதிப்படுத்தப்பட்ட படிவங்களையும் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். (ஸ்கான் செய்யப்பட்ட பொருட்கள்/சேவைகள் வெளிப்படுத்தல் படிவம் (SVAT 04) மற்றும் குறைநிரப்புப் படிவம் போன்றவை (SVAT 05, SVAT 05 (a) மற்றும் 05 (b) ஏற்புடையதாயின்) உரிய பஇவ களுக்கு அவர்களின் வழங்கல் மற்றும் கடன் வவுச்சர் இலக்கங்கள் தொடர்பான உறுதிப்படுத்தலினைப் பெற்றுக் கொள்வதற்காக அனுப்பி வைக்கப்படலாம்.)

*6.2* ***கடன் வவுச்சர்***

(i) பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட கொள்வனவாளர் SVAT 04 மற்றும் SVAT 05 ஆகியவற்றின் பெறுகைகள் தொடர்பில் திணைக்களத்தினால் அளிக்கப்பட்ட **இலகுபடுத்தப்பட்ட பெசேவ வரவு வவுச்சர்** ஒன்றினை வழங்குவார். பஇவ ஒரு மாத காலப்பகுதியில் அவரினால் வழங்கப்பட்ட வழங்கல்கள் தொடர்பில் உரிய மாதத்தின் இறுதியிலிருந்து 15 நாட்களினுள் கடன் வவுச்சர்களைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்படுகின்றார். பஇவ வங்கியெனில், உரிய பஇவ களுக்கு SVAT 04 மற்றும் 05 இனைச் சமர்ப்பிக்காமல் கடன் வவுச்சர்களைச் சேகரிப்பதற்கு அனுமதிக்கப்படுகின்றது. எவ்வாறாயினும், அத்தகைய வங்கியானது வங்கியின் உரிய கிளையில் SVAT 05 இன் அதே தகவல்களைப் பேணுமாறு கேட்கப்படுகின்றது.

(ii) ஏதேனும் வரி விதிக்கத்தக்க காலப்பகுதி தொடர்பில் எவரேனும் பஇவ இனால் பெறப்படும் **அனைத்து** SVCV களும் அவ்வாறு மேற்கொள்ளுமாறு அவருக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டிருப்பின் இடைநிறுத்தப்பட்ட வழங்கல்களை நிரூபிப்பதற்கு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் சமர்ப்பிக்குமாறு கேட்கப்படுகின்றனர்.

(iii) அத்தகைய வழங்கல்கள் வழங்கப்பட்டு அதே மாத காலப்பகுதியினுள் அவை திருப்பி அனுப்பி வைக்கப் பட்டிருக்குமாயின் அத்தகவலானது, குறித்த மாதத்திற்கென பெறப்பட்ட வரவு வவுச்சர் இலக்கத்துடன், வழங்கல்கள் திருப்பியனுப்பி வைக்கப்பட்ட பெறுமதியினை வழங்கும் SVAT 05 (b) இல் வெளிப்படுத்தப்படுதல் வேண்டும். விலை விபரப் பட்டியல்களின் மூலப் பெறுமதியானது அத்தகைய திரும்புதல்களின் முறையற்றவை SVAT 07 இல் மாத்திரம் குறிப்பிடப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும், தேறிய பெறுமதி மீதான வரவு வவுச்சரானது பஇகொ இனால் வழங்கப்படுகின்றது. திருப்பியனுப்பி வைக்கப்பட்ட வழங்கல்களின் தொகுப்பு SVAT 07 (b) இல் வெளிப்படுத்தப்படுதல் வேண்டும்.

(iv) வழங்கல்கள் முன்னர் வெளிப்படுத்தப்பட்ட வழங்கல்கள் தொடர்பில் குறித்த மாத காலப்பகுதியில் திருப்பியனுப்பப்பட்ட வழங்கல்களாயின் அது தொடர்பான தகவல்கள் முன்னதாகப் பெறப்பட்ட கடன் வவுச்சர் இலக்கத்துடன் நடைமுறையாண்டின் SVAT 05 (b) இல் வெளிப்படுத்தப்படல் வேண்டும். நடப்பு மாத காலப்பகுதியில் வழங்கப்படும் தேறிய வழங்கல்கள் தொடர்பில் நடப்பு காலப்பகுதிக்கான கடன் வவுச்சர்களின் இலக்கமும் வெளிப்படுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன் பெறப்பட்ட நடைமுறைக் கடன் வவுச்சர் இலக்கத்துடன் சேர்த்து திருப்பியனுப்பப்பட்ட வவுச்சர்களின் பெறுமதியும் வெளிப்படுத்தப்படல் வேண்டும். வழங்கல்களின் மூலம் பெறுமதியானது குறித்த மாத காலப்பகுதியில் திருப்பியனுப்பப்பட்ட ஏதேனும் வழங்கல்களைப் பொருட்படுத்தாது SVAT 07 இல் வெளிப்படுத்தப்படுதல் வேண்டும். திருப்பியனுப்பி வைக்கப்பட்ட வழங்கல்களின் தொகுப்பு SVAT 07 (b) இல் வெளிப்படுத்தப்படுதல் வேண்டும்.

(v) தொடர்ந்து வரும் நடைமுறையாண்டில் வழங்கல்கள் இல்லாவிடின், ஆனால் முன்னதாக பிரகடனப்படுத்தப்பட்ட வழங்கல்களுடன் தொடர்புடைய மாத காலப்பகுதியில் திருப்பியனுப்பி வைக்கப்படும் வவுச்சர்கள் எதிர்மறைப் பெறுமதியில் பெறப்பட்ட நடைமுறை கடன் வழங்கல் இலக்கத்துடன் தொடர்புடைய அத்தகைய வழங்கல்களுக்காக முன்னர் பெறப்பட்ட கடன் வவுச்சர் இலக்கத்தினையும் SVAT 05 (b) வெளிப்படுத்தப்படுதல் வேண்டும். திருப்பியனுப்பி வைக்கப்பட்ட வழங்கல்களின் தொகுப்பு SVAT 07 (b) இல் வெளிப்படுத்தப்படுதல் வேண்டும்.

*6.3* ***பெசேவ விபரத்திரட்டு***

(i) பஇவ, அத்தகைய இடைநிறுத்தப்பட்ட வழங்கலுடன் தொடர்புடைய வரவு வவுச்சர் பெறப்பட்டுள்ளதா, இல்லையா என்பதனைப் பொருட்படுத்தாது வழங்கல் காலத்தினைக் கருத்தில் கொண்டு பெசேவ விபரத்திரட்டின் கூடு "C" இல் பெபேசவ இடைநிறுத்தப்பட்ட வழங்கல்களினை வெளிப்படுத்துதல் வேண்டும். இடைநிறுத்தப்பட்ட வழங்கல் மீதான உரிய இடைநிறுத்தப்பட்ட பெசேவ தொகையானது கூடு '2A' இல் வெளிப்படுத்தப்படுதல் வேண்டும். ஏதேனும் கலண்டர் மாதத்திற்கான SVCV இனூடாக இடைநிறுத்தப்பட்ட வழங்கல்கள் தொடர்பான அவரின் பெசேவ கொடுப்பனவுகளின் தீர்ப்பனவுக்காக வேண்டுகோள் விடுக்கும் எவரேனும் பஇவ ஒருவர் அத்தகைய

வேண்டுகோளினை வழங்கல் மற்றும் உரிய வெளியீட்டு வரி வெளிப்படுத்தப்படுகின்ற பெசேவ விபரத்திரட்டிலுள்ள கூடு "R" இல் மேற்கொள்ளுதல் வேண்டும். தற்போதிருக்கும் பெசேவ விபரத்திரட்டின் கூடு '2A' மற்றும் கூடு "R" இல் பதியப்பட்டுள்ள தொகைகளுக்கிடையில் வேறுபாடு காணப்படுமிடத்து, அத்தகைய வேறுபாடானது வருமான இழப்பு எதுவும் ஏற்படாமல் கொடுக்கல் வாங்கலானது முறையாக வெளிப்படுத்தப்பட்டதாக நிரூபிப்பதற்கு வேறுபாட்டுக்கான ஆணையாளர் நாயகத்தின் திருப்திக்காக உரிய கணக்கிணக்கம் சமர்ப்பிக்கப்பட்டாலன்றி பெசேவ அறவிடத்தக்கதான நியம ரீதியான வழங்கலொன்றாகக் கருதப்படல் வேண்டும்.

(ii) பெறுமதி சேர் வரியில் இடைநிறுத்தப்பட்ட வழங்கல் பெறுமதியானது, படிவம் SVAT 07 இலுள்ள வழங்கல் பெறுமதிக்கும் படிவம் SVAT 07 (b) இலுள்ள திருப்பியனுப்பப்பட்ட வழங்கல் பெறுமதிக்குமிடையிலான வேறுபாடாக இருத்தல் வேண்டும்.

(iii) ஏதேனும் உபாய அபிவிருத்தி கருத்திட்டத்திற்கு வழங்கப்பட்ட பொருட்கள் அல்லது சேவைகளின் ஏதேனும் வரி விலக்களிப்பு பெற்ற வழங்கலினைக் கொண்டுள்ள பஇவ, வரி எனக் கருதப்பட்டவை மற்றும் வரி எனக் கருதப்படுபவையுடன் கூடு இலக்கம் A2 இலுள்ள அத்தகைய வழங்கல் பெறுமதியினை வெளிப்படுத்துதல் வேண்டும். அத்துடன் வரி வரவு எனக் கருதப்படுபவை கூடு இலக்கம் R2 இலும் வெளிப்படுத்தப்படுதல் வேண்டும்.

*6.4* ***ஆவணங்கள்***

(i) பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட வழங்குநர்கள் தனியாக ஒவ்வொரு வாடிக்கையாளர் தொடர்பிலும் ஒரு மாத காலப்பகுதியில் இடம்பெறும் அனைத்து கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பிலும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் இலகுபடுத்தப்பட்ட பெசேவ கிளையில் இரண்டு தரப்பினராலும் உறுதிப்படுத்தப்பட்ட மேற்படி SVAT 04, SVAT 05, 05 (a) மற்றும் 05 (b) இனைக் கையளிக்குமாறு கேட்கப்படுகின்றனர்.

(ii) பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட வழங்குநர்கள் மொத்த வெளியீட்டு வெளிப்படுத்தல் படிவமான இபெசேவ 03 இனைச் சமர்ப்பிக்குமாறு கேட்கப்படுகின்றனர்.

(iii) குறித்த மாத காலப்பகுதியில் (SVAT 07) மேற்கொள்ளப்பட்ட அனைத்து இடைநிறுத்தப்பட்ட வழங்கல்களின் தொகுப்பொன்றினைச் சமர்ப்பிக்குமாறு கேட்கப்படுவதுடன் அது எக்ஸெல் வடிவத்தில் தரப்பட்டுள்ள உரித்தளிக்கப்பட்ட மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படுதலும் வேண்டும்.

(iv) பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட வழங்குநர்கள் ஏதேனும் மாத காலப்பகுதியில் SVAT 07 (a) வழங்கப்பட்ட அனைத்து வரவுத் தாள்களின் பொழிப்பினைச் சமர்ப்பிக்குமாறு கேட்கப்படுவதுடன் அது தரப்பட்ட எக்ஸெல் வடிவத்தில் மின்னஞ்சலில் அனுப்பி வைக்கப்படுதலும் வேண்டும்.

(v) பஇவ ஏதேனும் மாத காலப்பகுதியில் வழங்கப்பட்ட அனைத்து செலவுத் தாள்களினதும் பொழிப்பொன்றினைச் சமர்ப்பிக்குமாறு கேட்கப்படுவதுடன் SVAT 07 (b) அதனை தரப்பட்டுள்ள எக்ஸெல் வடிவத்தில் மின்னஞ்சலில் அனுப்பி வைக்கப்படுதலும் வேண்டும்.

(vi) வங்கியானது, உரிய கிளையின் (வங்கியின்) பெயர் தொடர்பான தகவலை வழங்குவதற்கு SVAT 07 இற்கு மேலதிக நிரலொன்றினை உட்புகுத்துமாறு கேட்கப்படுகின்றனர்.

(vii) அனைத்து பஇவ களும் தேவையான அனைத்துப் படிவங்கள் மற்றும் இணையத்தளத்திலிருந்து பதவிறக்கம் செய்து பெறக்கூடிய தழுவு கடிதத்துடன் கலண்டர் மாதமொன்றுடன் தொடர்புடைய விபரங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் SVAT 03, 04, 05, 05 (a), 05 (b), 07, 07 (a), 07 (b), 07 (c) மற்றும் 07 (d) படிவங்களை அடுத்து வரும் மாதத்தின் இறுதியில் அல்லது அதற்கு முன்பாகவோ இலகுபடுத்தப்பட்ட பெசேவ கிளையில் கையளித்தல் வேண்டும்.

(viii) இடைநிறுத்தப்பட்ட பெசேவ மீதான வழங்கல்களை கணிப்பீடு செய்வதற்கென தனியான பதிவேடுகள் பேணப்படுதல் வேண்டும்.

(ix) இடைநிறுத்தப்பட்ட வரி விபரப் பட்டியல்கள் SVAT 04, 05, 05 (a), 05 (b) படிவங்களின் வழங்குதலில் காணப்படும் வழங்குநர்களின் கவனயீனம் அல்லது உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்குத் தேவையான அறிக்கைகளை உரிய நேரத்தில் வழங்கத் தவறுதல் போன்றவை மற்றைய தரப்புக்குப் பாதிப்பினை ஏற்படுத்துமாயின், அது தொடர்பில் பொருள் விபரத் திரட்டினைச் சமர்ப்பிக்காமை தொடர்பான பெசேவ சட்டத்தின் நியதிச்சட்ட ஏற்பாடுகள் மிகவும் கடுமையாகப் பிரயோகிக்கப்படும்.

7. **உபாய அபிவிருத்தி கருத்திட்டத்திற்கான பொருட்கள் அல்லது சேவைகளின் வழங்கலுடன் தொடர்புடைய ஆவணப்படுத்தல்.**- உபாய அபிவிருத்தி கருத்திட்டத்திற்கான வழங்கலினை மேற்கொள்கின்ற எவரேனும் ஆள், பொருட்கள் அல்லது சேவைகளின் வழங்கல் திகதி, வழங்கப்பட்ட அத்தகைய பொருட்கள் அல்லது சேவைகளுக்குரிய உபாய அபிவிருத்தி கருத்திட்டத்தின் பெயர் மற்றும் முகவரி, வரி செலுத்துநர் அடையாள இலக்கம் மற்றும் அத்தகைய வழங்கலின் பெறுமதி என்பன தொடர்பான விபரங்களை வெளிப்படுத்துகின்ற SVAT 07AA படிவமொன்றினைச் சமர்ப்பிக்குமாறு கோரப்படுகின்றனர்.

8. **பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட வழங்குநர்களுக்கான விசேட அறிவுறுத்தல்கள்- அந்நியச் செலாவணியல்லா வழங்குநர்கள்**

(i) பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட வழங்குநர்கள் வெளிநாட்டுக் கொள்வனவாளரின் சார்பில் வெளிநாட்டு நாணயமல்லா அடிப்படையில் அல்லது காசு அடிப்படையில் பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட கொள்வனவாளருக்கு பொருட்கள் அல்லது சேவைகளை வழங்குவாராயின், அத்தகைய பஇவ அந்நியச் செலாவணியல்லா வழங்குநரென அழைக்கப்படுகின்றனர். அத்தகைய பஇவ வழங்கப்பட்ட அத்தகைய பொருட்கள் அல்லது சேவைகளுக்காக பஇவ இற்கு தாமதிக்காமல் பொருட்கள் அல்லது சேவைகளின் SVAT 02 (a) படிவத்தில் குறித்துரைக்கப்பட்டவாறு) காசல்லா வழங்கலின் மீது அந்நியச் செலாவணியல்லா இடைநிறுத்தப்பட்ட பெசேவ விலை விபரப் பட்டியலொன்றினை வழங்குதல் வேண்டும் :-

(அ) பஇவ அத்தகைய பொருட்கள், அல்லது சேவைகளின் வழங்கலினை வழங்குவதற்கு பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட கொள்வனவாளரிடமிருந்து வழங்கல் கோரிக்கையொன்றினைப் பெற்றிருத்தல் வேண்டும். அத்தகைய வழங்கல் வேண்டுகோளானது கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களின் விவரணம், அளவு மற்றும் இறுதிப் பொருளானது ஏற்றுமதி செய்யப்படவுள்ள வெளிநாட்டுக் கொள்வனவாளரின் பெயர்கள் மற்றும் முகவரிகளை அத்தியாவசியமாகக் கொண்டிருத்தல் வேண்டும்.

(ஆ) பஇவ பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட கொள்வனவாளருக்கு பொருட்கள்/சேவைகளை வழங்குவதற்கான அறிவுறுத்தலுடன் கூடிய கொள்வனவு கட்டளையொன்றினை வெளிநாட்டுக் கொள்வனவாளரிடமிருந்து பெற்றிருத்தல் வேண்டும். அத்தகைய கொள்வனவு கட்டளை வழங்குநர்களின் பெயர், முகவரி, விவரணம் மற்றும் தொகை என்பன மேலே (அ) இலுள்ள வழங்கல் வேண்டுகோளில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களுடன் ஒத்திருப்பது அவசியமானதாகும் ; அத்துடன்

(இ) பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட வழங்குநர்கள் வேறு ஏதேனும் மூலத்திலிருந்தல்லாமல் வெளிநாட்டுக் கொள்வனவாளரிடமிருந்து நேரடியாக அத்தகைய வழங்கல்களின் தீர்ப்பனவாக வெளிநாட்டு மாற்றுதல்களைப் பெறுதல் வேண்டும். (உதாரணமாக வெளிநாட்டுக் கொள்வனவாளரின் சம்மதத்துடன் பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட வழங்குநரின் ஏதேனும் மூன்றாம் தரப்பு பொறுப்பினைக் கொடுத்து தீர்ப்பதற்கு அனுமதிக்கப்பட மாட்டாது.)

(ii) அந்நியச் செலாவணியல்லா வழங்குநரொருவர் பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட வழங்குநராயின், அவர் அத்தகைய அந்நியச் செலாவணியல்லா வழங்கல் தொடர்பில் அந்நியச் செலாவணியல்லா தயாரிப்பாளராக இருக்கின்ற பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட கொள்வனவாளரினால் வழங்கப்பட்டதும் ஆணையாளர் நாயகத்தினால் அளிக்கப்பட்டதுமான "அந்நியச் செலாவணியல்லா கடன் வவுச்சர்" ஒன்றினைப் பெறுவார். பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட வழங்குநர் ஒருவர் பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட வழங்குநரினால் வழங்கப்பட்ட வழங்கல்கள் தொடர்பில் தொடர்புடைய மாதத்தின் இறுதியிலிருந்து 10 நாட்களினுள் SVAT 04 மற்றும் SVAT 05 (மற்றைய பொருத்தமுடையதாயின் 05 (a) மற்றும் 05 (b) இனைச் சமர்ப்பிக்குமாறு கேட்கப்படுவதுடன் SVCV ஆனது தொடர்புடைய மாதத்தின் இறுதியிலிருந்து 15 நாட்களினுள் பெறப்படுதல் வேண்டும்.

(iii) பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட வழங்குநரொருவர் (அந்நியச் செலாவணியல்லா வழங்குநர்) அத்தகைய வழங்கல்கள் தொடர்பில் SVAT 07 (c) மற்றும் SVAT 07 (d) படிவங்களைத் தயாரித்தல் வேண்டும். அத்தகைய ஆள் மேற்குறித்த படிவங்கள் கொண்டிருக்கின்ற அனைத்து ஆதரவு ஆவணங்களையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(iv) பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட வழங்குநரொருவர் குறித்த மாத காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட அந்நியச் செலாவணியல்லா வழங்கல்கள் தொடர்பில் SVAT 07 (c) மற்றும் SVAT 07 (d) படிவங்களைச் சமர்ப்பிக்குமாறு கேட்கப்படுவதுடன் அது உரித்தளிக்கப்பட்ட மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

(v) ஏனைய அனைத்து அறிவுறுத்தல்களும் மற்றும் நடைமுறைகளும் சாதாரண கடன் வவுச்சர்/இடைநிறுத்தப்பட்ட பெசேவ விலை விபரப் பட்டியல்களுடன் பொருத்தக் கூடிய வகையில் அவ்வாறே பிரயோகிக்கப்படும்.

*9*. **பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட கொள்வனவாளர்கள் மற்றும் பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட வழங்குநர்களுக்கான பொதுவான அறிவுறுத்தல்கள்**

(i) அனைத்து பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட கொள்வனவாளர்களும் பெசேவ விபரத்திரட்டுக்களை மாதாந்தம் சமர்ப்பித்தல் வேண்டும்.

(ii) விதித்துரைக்கப்பட்ட கருத்திட்டங்களில் ஈடுபடுகின்ற பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட வழங்குநர்களும் மாதாந்த அடிப்படையில் பெசேவ விபரத்திரட்டினைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(iii) பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட கொள்வனவாளர் தகுதிநிலைக்கு கௌரவிக்கப்பட்ட அனைத்துப் பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட வழங்குநர்களும் தமது பெசேவ விபரத்திரட்டுக்களை மாதாந்த அடிப்படையில் சமர்ப்பித்தல் வேண்டும்.

(iv) மேற்குறிப்பிட்டவர்கள் தவிர்ந்த அனைத்துப் பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட வழங்குநர்களும் தமது பெசேவ விபரத்திரட்டுக்களைக் காலாண்டு அடிப்படையில் சமர்ப்பித்தல் வேண்டும்.

(v) விசேட கருத்திட்டங்களுக்கான வழங்கல்களை மேற்கொள்கின்ற பதிவு செய்யப்பட்ட ஆட்கள் தவிர்ந்த பெசேவ விபரத் திரட்டுக்கள் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் 7 ஆவது தளத்திலுள்ள தரவு நிரல்படுத்துதல் மற்றும் இறைவரி கணக்கீட்டுப் பிரிவில் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். அத்தகைய ஆட்கள் அவர்களின் விபரத்திரட்டினை 2 ஆவது தளத்திலுள்ள பெசேவ பிரிவின் ஆணையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். அனைத்து விபரத்திரட்டுக்களும் **அடுத்து வரும் மாதத்தின் இறுதி நாளன்று அல்லது அதற்கு முன்பாக** சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(vi) பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட கொள்வனவாளர் தகுதிநிலைக்கு கௌரவிக்கப்பட்ட பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட வழங்குநர்கள் பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட கொள்வனவாளருக்கென மேலே வழங்கப்பட்ட அனைத்து அறிவுறுத்தல்களையும் பின்பற்றுதல் வேண்டும்.

(vii) இடைநிறுத்தப்பட்ட வழங்கல்களைக் கொண்டுள்ள அனைத்தும் பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட கொள்வனவாளர்களுக்கும் பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட வழங்குநர்களுக்கும் பொருந்தக்கூடிய அறிவுறுத்தல்களைப் பின்பற்றுதல் வேண்டும்.

(viii) படிவங்களிலுள்ள அனைத்து எழுத்துக்கள் அல்லது இலக்கங்களும் நியூ ரோமன் எழுத்துருவிலும் எழுத்துருவ அளவு 12 இலும் கணனி முறையில் தட்டச்சு செய்யப்படுதல் வேண்டும்.

(ix) பெறுமதியானது கிட்டிய ரூபாவில் இருத்தல் வேண்டும். (சதங்களில் பதிவு செய்ய வேண்டாம்.)

(x) ஆணையாளர் நாயகத்தினால் அவரின் ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்பட்டவாறு அத்தகைய விபரங்களைக் கொண்டிருக்காத அத்தகைய படிவத்தில் அல்லது அறிக்கைகளைச் சமர்ப்பிக்கின்ற இபெசேவ பதிவு செய்யப்பட்ட கொள்வனவாளரெனில், அவர் அத்தகைய இபெசேவ அறிக்கைகளினைச் சமர்ப்பித்திருக்கவில்லை எனக் கருதப்படுதல் வேண்டும்.

(xi) இடைநிறுத்தப்பட்ட கொள்வனவுகள் அல்லது இடைநிறுத்தப்பட்ட வழங்கல்கள் காணப்படாதவிடத்து NIL அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(xii) இபெசேவ இற்காக பதிவு செய்யப்பட்ட ஆளொருவரின் முகவரி மாற்றமானது புதிய TIN சான்றிதழ் பிரதிகள் புதிய பெசேவ சான்றிதழ் மற்றும் முகவரி மாற்றத்தின் பின்னர் பெற்றுக்கொள்ளப்பட்ட படிவ இல. 13 (கம்பனிகளாயின்) ஆகியவற்றினைச் சமர்ப்பிக்குமிடத்து மேற்கொள்ளப்பட முடியும்.

(xiii) தொலைந்து போன கடன் வவுச்சர் ஏடுகள் அல்லது கடன் வவுச்சர்கள் தொடர்பில் அத்தகைய கடன் வவுச்சர் ஏடுகள் அல்லது வவுச்சர்களை இரத்துச் செய்யக் கூடிய வகையில் பெற்றுக் கொள்ளப்பட்ட சத்தியக் கடதாசி மற்றும் பொலிஸ் அறிக்கைகளுடன் இலகுபடுத்தப்பட்ட பெசேவ கிளைக்கு உடனடியாக அறிவிக்கப்படுதல் வேண்டும்.

(xiv) இபெசேவ பதிவு செய்தலினை இரத்துச் செய்யும் நடைமுறையானது, மூலச் சான்றிதழுடன் அது தொடர்பில் விடுக்கப்படும் வேண்டுகோளானது கிடைக்கப் பெற்றதன் பின்னர் பெசேவ பதிவு செய்தலினை இரத்துச் செய்ததன் பின்னர் மேற்கொள்ளப்படும். இபெசேவ முறைமை மற்றும் உள்நாட்டு இறைவரித் திணைக்கள முறைமையானது

அனைத்து பெசேவ விபரத் திரட்டுக்கள் மற்றும் இபெசேவ விபரத் திரட்டுக்கள் என்பன சமர்ப்பிக்கப்பட்டுள்ளனவா என்பதனை செவ்வை பார்க்கின்றது. மேலும், இரத்துச் செய்யப்பட்டவுடன் அத்தகைய ஆளின் பெயரானது இணையத்தளத்தில் வெளியிடப்படும்.

(xv) பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட வழங்குநர் முறைமையானது இந்த ஒழுங்குவிதியின் 2 ஆம் பந்தியின் உப பந்தி (ஈ) அல்லது (உ) இல் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளை திருப்திப்படுத்தியதன் பின்னர் மூலச்சான்றிதழுடன் விடுக்கப்படும் பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட கொள்வனவாளர் தகுதிநிலைக்கு மாற்றப்பட முடியும்.

(xvi) பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட கொள்வனவாளர் தகுதிநிலையானது பெறப்பட்ட மூலச் சான்றிதழ் மற்றும் கடன் வவுச்சர் புத்தகங்களுடன் (ஏதேனும் இருப்பின்) விடுக்கப்படும் கோரிக்கையின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட வழங்குநருக்கு மாற்றிக் கொள்ளப்பட முடியும்.

(xvii) தேவைப்படும் வீதாசாரமானது, அடுத்துவரும் மூன்று வரிவிதிக்கத்தக்க காலப்பகுதிக்கு அடையப்பெற்றிருக்காதவிடத்து உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திடம் இருக்கக்கூடிய தகவல்களின் அடிப்படையில் பதிவுசெய்யப்பட்டு இனங்காணப்பட்ட கொள்வனவாளரின் தகைமையானது பதிவுசெய்யப்பட்டு இனங்காணப்பட்ட வழங்குநராக மாற்றம் பெறலாம்.

(xviii) இடைநிறுத்தப்பட்ட கொள்வனவுகள் அல்லது வழங்கல்களின் உறுதிப்படுத்துகையானது இரண்டு தரப்பும் மின்னஞ்சல் வடிவில் தரப்பட்டுள்ள சரியான முறையில் அறிக்கைகளைத் தயாரித்திருப்பார்களாயின் மேற்கொள்ளப்படும்.

10. **இத்திட்டத்தின் நோக்கங்களுக்காக குறித்துரைக்கப்பட்ட படிவங்கள் பின்வருமாறு**

(அ) பதிவு செய்தல் படிவம் - (SVAT 01)

(ஆ) பெசேவ அறவிடப்படாமல் வழங்கல்களுக்குப் பயன்படுத்தப்படும் இடைநிறுத்தப்பட்ட பெசேவ விலை விபரப் பட்டியல் - (SVAT 02)

(இ) அந்நியச் செலாவணியல்லா இடைநிறுத்தப்பட்ட விலை விபரப் பட்டியல் - (SVAT 02 (a))

(ஈ) திணைக்களத்திலிருந்து பெறப்பட வேண்டிய மற்றும் பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட வழங்குநரிடமிருந்தான கொள்வனவுகள் மீதான பெசேவ கொடுப்பனவுப் பொறுப்பினை கொடுத்துத் தீர்ப்பதற்காக கொள்வனவாளரினால் பயன்படுத்தப்படும் இலகுபடுத்தப்பட்ட பெசேவ கடன் வவுச்சர் - (SVCV)

(உ) கொள்வனவாளர்கள் மற்றும் வழங்குநர்களினால் சமர்ப்பிக்குமாறு கேட்கப்படும் மொத்த வெளியீட்டு வெளிப்படுத்துகை - (SVAT 03)

(ஊ) இரண்டு தரப்பினரிடமிருந்தான வழங்கல் உறுதிப்படுத்துகை, இது பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட வழங்குநர்களினால் வழங்கப்பட வேண்டியுள்ளது. - (SVAT 04) - **இரு தரப்பு ஆவணம்**

(எ) மாதாந்த குறைநிரப்பு வெளிப்படுத்துகைப் படிவம் (SVAT 05) - இது வழங்கல்களின் பொழிப்பாகும். வழங்குனர்கள் இப்பாடத்தினை SVAT 04 உடன் சேர்த்துச் சமர்ப்பிக்குமாறு கேட்கப்படுகின்றனர். - **இரு தரப்பு ஆவணம்**

(ஏ) இடைநிறுத்தப்பட்ட வரவுத்தாள்கள் வெளிப்படுத்துகைப் படிவம். இந்த ஆவணமானது (SVAT 05 (a)) வழங்குனரினால் சமர்ப்பிக்கப்படுமாறு கேட்கப்படுகின்றது. - **இரு தரப்பு ஆவணம்**

(ஐ) இடைநிறுத்தப்பட்ட செலவுத்தாள்கள் வெளிப்படுத்துகைப் படிவம். இந்த ஆவணப்படுத்தலானது வழங்குனர்களினால் சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனக் கேட்கப்படுகின்றது. (SVAT 05 (b)) - **இரு தரப்பு ஆவணம்**

(ஒ) இடைநிறுத்தப்பட்ட கொள்வனவுப் பொழிப்பு (அந்நியச் செலாவணியல்லா அடிப்படையில்) - இந்த ஆவணப்படுத்தலானது கொள்வனவாளரினால் சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனக் கேட்கப்படுகின்றது. (SVAT 06)

(ஓ) குறித்த மாதத்தில் அல்லது தொடர்ந்து வரும் மாதத்தில் திருப்பியனுப்பி வைக்கப்பட்ட வரவு வவுச்சர்கள் மற்றும் கொள்வனவு இரத்துச் செய்யும் பரிந்துரை. இந்த ஆவணமானது பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட கொள்வனவாளரினால் சமர்ப்பிக்கப்படுமாறு கேட்கப்படுகின்றது. (SVAT 06 (a))

(ஔ) அந்நியச் செலாவணியல்லா அடிப்படையில் பெறப்பட்ட இடைநிறுத்தப்பட்ட வழங்கல் தொடர்பான விபரங்கள். இந்த ஆவணப்படுத்தலானது பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட கொள்வனவாளரினால் சமர்ப்பிக்க வேண்டுமெனக் கோரப்படுகின்றது. (SVAT 06 (b))

(ஃ) அந்நியச் செலாவணியல்லா அடிப்படையில் பெறப்பட்ட இடைநிறுத்தப்பட்ட வழங்கலுக்கெதிராக பெறப்பட்ட ஏற்றுமதி விபரங்களின் பொழிப்பு. இந்த ஆவணமானது பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட கொள்வனவாளரினால் சமர்ப்பிக்க வேண்டுமெனக் கோரப்படுகின்றது. (SVAT 06 (c))

(க) இடைநிறுத்தப்பட்ட வழங்கல்களின் பொழிப்பு. இந்த ஆவணப்படுத்தலானது பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட வழங்குனரினால் சமர்ப்பிக்குமாறு கோரப்படுகின்றது. (SVAT 07)

(கா) வழங்கப்பட்டு இடைநிறுத்தப்பட்ட வரவுத்தாள்களின் பொழிப்பு. இந்த ஆவணமானது பதவி செய்யப்பட்டு இனங்காணப்பட்ட வழங்குனர்களினால் சமர்ப்பிக்குமாறு கேட்கப்படுகின்றது. (SVAT 07 (a))

(கி) வழங்கப்பட்ட, இடைநிறுத்தப்பட்ட வரவுத்தாள்களின் பொழிப்பு - இந்த ஆவணப்படுத்தலானது பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட வழங்குனரினால் சமர்ப்பிக்க வேண்டுமெனக் கேட்கப்படுகின்றது. (SVAT 07 (b))

(கீ) அந்நியச் செலாவணியல்லா தயாரிப்பாளர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட, இடைநிறுத்தப்பட்ட வழங்கல்களின் பொழிப்பு - இவ் ஆவணப்படுத்தலானது பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட வழங்குனரினால் சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனக் கேட்கப்படுகின்றது. (SVAT 07 (c))

(கு) அந்நியச் செலாவணியல்லா தயாரிப்பாளர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட, வழங்கல்கள் தொடர்பில் பெறப்பட்ட வெளிநாட்டு அனுப்புதல்களின் பொழிப்பு - இந்த ஆவணப்படுத்தலானது பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட வழங்குனரினால் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டுமெனக் கேட்கப்படுகின்றது. (SVAT 07 (d))

(கூ) SVAT 06 அஅ படிவத்தினைச் சமர்ப்பிக்குமாறு கேட்கப்படுகின்ற உபாய அபிவிருத்தி கருத்திட்டம்

(கெ) SVAT 07 அஅ இனைச் சமர்ப்பிக்குமாறு கேட்கப்படுகின்ற உபாய அபிவிருத்தி கருத்திட்டத்திற்கு பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குகின்ற எவரேனும் ஆள்.

*11.* **இந்த ஒழுங்குவிதிகளின் தொகுப்பானது காலத்திற்குக் காலம் மேற்கொள்ளப்படும் திருத்தங்களுக்கு உட்படக் கூடியது.**

*2012.07.30* ஆந் திகதிய எஸ்ஈசி *2012/03* ஆம் இலக்க சுற்றறிக்கையின் கீழ் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்டுள்ள வழிகாட்டுதலானது, இந்த வர்த்தமானி அறிவித்தலுக்கு முந்திய காலப்பகுதிக்கு மேலோங்கி நிற்கும்.

*4-877*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.